# சந்தேகத்திற்கிடமான குறுஞ்செய்திகள் (SMS) மற்றும் அழைப்புகள்

### செய்யவேண்டியவை

- ✓ குறுஞ்செய்திகள் பெறப்பட்டால் அனுப்புநரின் தொலைபேசி இலக்கம் அல்லது அடையாளத்தைச் சரிபார்க்கவும்.
- ✓ குறுஞ்செய்திகளில் அடங்கியுள்ள உள்ளடக்கத்தைப் பற்றி வங்கியைத் தொடர்பு கொண்டு சரிபார்த்துக்கொள்ளவும்.

### செய்யக்கூடாதவை

- ✗ எல்லா குறுஞ்செய்திகளுக்கும் பதிலளித்து உங்கள் வங்கி அட்டை விவரங்கள் அல்லது கணக்கு விவரங்களைக் கொடுப்பது.

# வைரஸ் காப்பீட்டை நிறுவவும்



### செய்யவேண்டியவை

- ✓ நன்கு அறியப்பட்ட வைரஸ் காப்பீட்டை நிறுவவும்.

### செய்யக்கூடாதவை

- ✗ எந்த சந்தர்ப்பத்திலும் வைரஸ் காப்பீட்டின் செயற்பாட்டை நிறுத்திவிடுவது.

# அமைப்பு (சிஸ்டம்) மற்றும் ஆண்டி-வைரஸை இற்றைப்படுத்தவும் (அப்டேட்)

### செய்யவேண்டியவை

- ✓ சாதனங்களை.˙.கருவிகளை இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் வைத்திருங்கள்.
- ✓ இயங்கு தளம் (ஆப்பரேட்டிங் சிஸ்டம்) மற்றும் வைரஸ் காப்பீடுகளை இற்றைப்படுத்தி வைத்திருங்கள்.

# ஹிதவதி

“இலங்கைப் பிரஜைகள் அனைவருக்கும், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இணையத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக உதவியளிப்பது மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதே ஹிதவதி திட்டத்-தின் பிரதான நோக்கமாகும். மேலும், ஹிதவதியின் இணையதளம், சமூக ஊடக அலைவரிசைகள் மற்றும் அச்சிடப்பட்ட சாதனங்கள் மூலமாகவும் தேவையான பாதுகாப்பு குறிப்புகள், அறிவூட்டல்கள் மற்றும் பாதுகாப்பு தகவல்களுடன் இணையத்தகவல் ஊடுவெளியில் (சைபர்ஸ்பேஸில்) எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை இதனூடாக சமூகத்திற்கு உணர்த்தும் பணியினை செய்து வருகிறது.

”ஹிதவதி” என்பது டுமு டொமைன் மூலம் மேற்கொள்ளப்படும் மற்றுமொரு சமூக திட்டமாகும், மேலும் இச்சேவைகள் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகிறன.

# எங்களை தொடர்பு



011-421-6062 help@hithawathi.lk +94 77 771 1199

# வேலை நேரம்

Weekdays 08.30 am - 07.00 pm

Saturdays 08.30 am - 05.00 pm

Closed on Public holidays.

© Copyright - Hithawathi

ஹிதவதீ | HITHAWATHI

# பாதுகாப்பான வங்கியியல்

## ஹிதவதியிடமிருந்து



www.hithawathi.lk

# கடவுச்சொல்..

## செய்யவேண்டியவை

- ✓ வலுவான கடவுச்சொற்களை உருவாக்கவும்.
- ✓ முடிந்தவரைப் பல காரணி அங்கீகாரத்தை (ஆகுயு) இயங்கச்செய்தல்.
- ✓ கடவுச் சொற்களைப் பாதுகாப்பாக சேமிக்கும் வழிமுறைகளைப் பின்பற்றவும்.

## செய்யக்கூடாதவை

- ✗ கடவுச்சொற்களைக் கடதாசிகளில் எழுதுவது.
- ✗ ஒரு முறை பாவிக்கக்கூடியதாகக் கிடைக்கப் பெறும் கடவுச்சொல்லை (முவீ) மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.
- ✗ எல்லா கணக்குகளுக்கும் ஒரே கடவுச்சொல்லைப் பயன்படுத்துவது.
- ✗ பிறந்தநாள், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது தொலைபேசி இலக்கம் போன்ற யூகிக்க எளிதான கடவுச்சொல்லை பயன்படுத்துவது.




# சாதனம் / கருவி

## செய்யவேண்டியவை

- ✓ சாதனத்தைத் திறக்க கைரேகை, பின் (PIN) இலக்கம் அல்லது கடவுச்சொல் போன்ற வலுவான பாதுகாப்பு முறையையே பயன்படுத்தவும்.
- ✓ பயன்பாட்டில் இல்லாத போது சாதனங்களை பூட்டி (லொக் செய்து) வைக்கவும்.

## செய்யக்கூடாதவை

- ✗ பயன்பாட்டில் இல்லாத போது வங்கி செயலிகள் அல்லது இணையம் ஊடாக வங்கித் தளங்களில் உள்நுழைந்திருப்பது
- ✗ ஜெயில்பிரேக் அல்லது சாதனத்தை ஷரூட் செய்து வைப்பது.





# உள்நுழைவு செயல்முறை

## செய்யவேண்டியவை

- ✓ உங்கள் வங்கிச் செயலி மூலமாக உங்கள் செயற்பாடுகளை யாராவது உற்றுப் பார்ப்பதாக நீங்கள் உணர்ந்தால், உடனடியாக கடவுச்சொற்களை மாற்றவும்.

## செய்யக்கூடாதவை

- ✗ உங்கள் வங்கி பயன்பாடுகள் மற்றும் கணக்குகளில் உள்நுழைய வேறொருவரை அனுமதிப்பது.



# இணைப்பு

## செய்யவேண்டியவை

- ✓ எப்போதும் பாதுகாப்பான இணைப்பொன்றை பயன்படுத்தவும்.

## செய்யக்கூடாதவை

- ✗ பொது வை.ஃ.பை (Wi-Fi) இணைப்புகள் மூலமாக இணைய வங்கி பயன்பாடுகளில் உள்நுழைவது.
- ✗ இணைய வங்கி வலை வாசல்களுக்குள் (போர்ட்டல்களுக்குள்) உள்நுழைய பொது / பகிரப்பட்ட கணினியைப் பயன்படுத்துவது.



# செயலிகள் மற்றும் மென்பொருள்

## செய்யவேண்டியவை

- ✓ மொபைல் ஆப்ளிகேஷன்களை பதிவிறக்கம் செய்து நிறுவும் போது (இன்ஸ்டால் செய்யும் போது) கவனமாக இருக்கவும்.
- ✓ உட்பிரவேச அனுமதி கோரிக்கைகள் மற்றும் செயலி மூலத்தைச் சரிபார்க்கவும்.

## செய்யக்கூடாதவை

- ✗ அறியப்படாத வழங்குநர்கள் / மூன்றாம் தரப்பு மூலங்களிலிருந்து செயலிகளை நிறுவுதல்.

# இணைப்புகள் மற்றும் இணையதளங்கள்

## செய்யவேண்டியவை

- ✓ ஏதேனும் மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி மூலம் பெறப்பட்ட ருசுடுகளை (இணையதளங்களின் இணைப்புகள்) கவனமாகச் சரிபார்க்கவும்.
- ✓ உங்கள் வங்கியைப் பற்றி ஏதேனும் மின்னஞ்சல்கள் பெறப்பட்டால் வங்கியுடன் தொடர்புகொண்டு இருமுறை சரிபார்த்துக் கொள்ளவும்.

## செய்யக்கூடாதவை

- ✗ மின்னஞ்சல்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பெறப்பட்ட இணைப்புகளைக் சொடுக்குவது.
- ✗ அறியப்படாத இணைப்பு அல்லது இணைய முகப்புகளில் உங்கள் வங்கியின் அட்டை விபரங்கள் அல்லது அதனுடன் தொடர்புடைய சான்றுகளை வழங்குவது.




# இணையத்தளங்களின் பாதுகாப்பை சரிபார்க்கவும்

## செய்யவேண்டியவை

- ✓ பணம் செலுத்த முன் இணையதளத்தின் ருசுடு ஆனது http:// என்பதற்குப் பதிலாக https:// என்று இருக்கிறதா எனச் சரிபார்த்துக்கொள்ளவும்.

## செய்யக்கூடாதவை

- ✗ பாதுகாப்பு விழிப்பூட்டல்களைப் புறக்கணிப்பது.

